பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 28 | வெள்ளிக்கிழமை | 13.09.2024 | அதிர்வு 042

## தோல்வியை ஏற்ற சஜித்

### ரணில் கூறுகின்றார்



"அனைத்தையும் இலவசமாகத் தருவதாகக் கூறும் சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயாக்கவுக்கும் எனக் 06




# சஜித்தை ஆதரிக்கும் தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை

### கட்சியின் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் தெரிவிப்பு



வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது தொடர்பான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். 06

## 15 இலட்சம் வாக்குகளுக்கு மேல் அநுரகுமாரவால் பெற முடியாது!

### ஆளுங்கட்சி எம்.பி. கணிப்பு



ஜே.வி.பி. இரண்டு முறைகள் ஆயுதம் ஏந்திய பயங்கரவாத அமைப்பு என்றும், அந்தக் கட்சியினர் ஓரளவு வளர்ச்சியைக் காட்டினாலும் 06




விடுதலைப் போராட்ட காலத்திலே போராளிகளுக்குப் பக்கபலமாகச் செயற்பட்ட மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களில் கிழக்கில் ஜோஸப் பரராஜசிங்கமும், அரியநாயகம் சந்திரநேருவும் பெரிதும் மதிக்கப்படுபவர்கள்.

சந்திரநேருவின் தந்தையார் 'அறப்போர் அரியநாயகம்' என்று மதிக்கப்பட்டவர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் நிலவிய காலத்தில் புலிகளின் மட்டக்களப்பு – அம்பாறை அரசியல் பொறுப்பாளரான இ.கௌசல்யனுடன் வாகனத்தில் பயணம் செய்த சந்திரநேரு அந்த வாகனத்தின் மீது பொலன்னறுவை மாவட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் கௌசல்யனுடன் உயிரிழந்தவர். விடுதலை புலிகளினால் 06

# அநாவசியமான பிரச்சினைகளைத் தாம் முன்கொண்டு செல்லத் தயாரில்லையாம்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

உண்மையான பிரச்சினைகளை விடுத்து அநாவசியமான பிரச்சினைகளை முன்கொண்டு செல்வதற்குத் தாம் தயாரில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“சிலர் உண்மையான பிரச்சினைகளை விடுத்து தேவையற்ற பல வாக்குறுதிகளை வழங்குகின்றனர்.

13 ஆம் அரசமைப்புத் திருத்தச் சட்டமும், இனவாதமும் இரண்டு பகுதிகளாகும். இதனைத் தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றிணைக்க எதிர்பார்க்கின்றனர்.

13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருந்தால் அவர் இனவாதி என்றும், 13ஆம் திருத்தச் சட்டத்தின் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தருவார்களாயின் இனவாதி அல்லர் என்றும் கருதுகின்றனர். இது பிழையான நிலைப்பாடாகும்.

இவ்வாறு கூறுபவர்கள் சில சந்தர்ப்பங்களில் இனவாதிகளாக இருக்கலாம்.



1983 ஆண்டில் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தியவர்கள் தொடர்பில் அனைவருக்கும் தெரியும்.

அவர்களும் 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் வாக்குறுதிகளை வழங்குகின்றனர்.

ஆகையால் மக்களுக்கு தேவையான பிரச்சினைகளையே முன்கொண்டு செல்ல வேண்டும் எனவும் மாறாக அநாவசியமான பிரச்சினைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படாது.”– என்றார்.

# வாக்களிப்பு நிலையங்களுக்கு இம்முறை கைப்பேசிகளை கொண்டுசெல்லத் தடை

ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களுக்குக் கைப்பேசிகளை எடுத்துச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டிருப்பதாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் மேலதிக ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

தபால் வாக்கினைப் பதிவு செய்து அந்த வாக்குச் சீட்டை படமெடுத்து சமூகவலைத்தளங்களில் பதிவு செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்தநிலையில், வாக்களிப்பு நிலையங்களுக்குக் கைப்பேசியை எடுத்துச் செல்ல ஏற்கனவே இருக்கின்ற தடையை இறுக்கமாக கடைப்பிடிக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டத்தின்படி வாக்களிப்பு என்பது இரகசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

எனினும் வாக்குச்சீட்டைப் படம் எடுத்து அதன் இரகசியத் தன்மையை பேணாமை சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாட்டுப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன எனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுறுத்தன் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு உத்தரவு

மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தினால் பிணை அனுமதி கிடைக்கப்பெற்ற முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்று விளக்கமறியலில் இருந்து வெளியேறினார்.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிற்கு எதிராக லஞ்ச ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டு வழக்குகள் கொழும்பு மேல்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த விசாரணைகளுக்கமைவாக, அடுத்த மாதம் 3 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து, முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல விளக்கமறியலில் இருந்து வெளியேறினார்.

தரங்குறைந்த மருந்து இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் 8 மாதங்களாக கெஹெலிய ரம்புவல்ல விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.





## சீனி இறக்குமதி மோசடி:

# அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு ஏற்கப்பட்டது

கடந்த ஆட்சிக்காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சீனிக்கு விதிக்கப்பட்ட வரி குறைக்கப்பட்டதன் மூலம் அரசாங்கத்திற்கு 1590 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாகக்கூறி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தியால் சமர்ப்பிக்கப்பட்ட மனு எஸ்.துரைராஜா, குமுதினி விக்ரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று ஆராயப்பட்டது. இதன்போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின் நேற்று முதல் எதிர்வரும் 8 வாரங்களுக்குள் அதனைத் தாக்கல் செய்யுமாறும் நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், அன்றைய தினம் முதல் நான்கு வாரங்களுக்குள் திருத்தப்பட்ட பிரதிவாதிகளின் பட்டியலைத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நீதியரசர்கள் குழாம் மேலும் உத்தரவிட்டுள்ளது.

# ராஜபக்ஷக்களுக்குப் பயந்த ரணில் தமிழ் மக்களுக்கு எதுவும் தரமாட்டார்

## சஜித்துக்கு ஆதரவு என்று அகில இலங்கை மகா சபை கட்சி அறிவிப்பு



(கனகராசா சரவணன்)

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷக்களுக்குப் பயந்து தன்னுடைய காலத்தைச் செலவழித்தவர். அவர் தமிழர்களுக்கு எதுவும் தரமாட்டார். அவரை நம்பமாட்டேன். 13 தவிர வேறு எதுவும் தரமாட்டார். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதாக எமது அகில இலங்கை மகா சபை கட்சி தீர்மானித்துள்ளது. தமிழ் மக்கள் சஜித்தை ஆதரித்து வாக்களிக்க வேண்டும்.”

– இவ்வாறு அகில இலங்கை மகா சபை கட்சியின் தலைவர் கலாநிதி. காசிலிங்கம் விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வெய் ஓப் மீடியா கற்கை நிலையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது எனத் தெளிவாகத்தான் இருந்தோம். ரணில் பல வாக்குறுதிகளை எங்களுக்குக் கொடுத்திருந்தார். முதலில் அவருடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தினோம். அப்போது அவர் நீங்கள் கூறுங்கள் எல்லாவற்றையும் செய்கின்றேன் என்றார். அப்போது நாங்கள் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் பல விடயங்களைச் செய்யவேண்டியுள்ளது, மாகாண சபைக்குக் கீழ் இருந்த பல பாடசாலைகளை மத்திய அரசின் கீழ் தேசிய பாடசாலைகளாகவும், வைத்தியசாலைகளையும் தேசிய வைத்தியசாலைகளாகவும் மாற்றியுள்ளனர். இதனை உடனடியாக மாகாணத்தின் கீழ் மாற்ற வேண்டும். இதற்குச் சட்டம் இயற்ற வேண்டியதில்லை. இதற்கு ஒரு உத்தரவாதம் வழங்கினால் சரி என்றோம்.

அதே மாதிரி கச்சேரிகளை ஒரு அமைச்சரவை தீர்மானம் எடுத்து மாற்ற முடியும் என்றோம். அதற்கும் உடன்படுவதாக அவர் தெரிவித்தார். நாங்கள் விசேட அதிகாரத்தைக் கொண்டு இவற்றையெல்லாம் உருவாக்க முடியும் என்றோம். அதேவேளை, இதனைச் செயற்படுத்த 5 பேர் கொண்ட ஒரு குழுவை அமைப்பதாகத் தீர்மானித்தோம். அதற்கும் சரி என்றார் ஜனாதிபதி ரணில்.

அதனை இந்தியாவுக்கும் அறிவித்தோம். அதன் பின்னர் அவர் இந்தியாவுக்குச் சென்றபோது அவருக்குப் பெரும் வரவேற்பு கிடைத்தது. அங்கும் இவற்றையெல்லாம் செய்வேன் என்று அவர் கூறினார். ஆனால், திரும்பி இங்கு வந்த பின்னர் இதனைச் செய்யவில்லை. ஏன் என்றால் ராஜபக்ஷ கட்சி இவற்றைச் செய்வதற்கு இடம் கொடுக்கவில்லை எனத் தெரியவந்தது.

ஆதலால் பஸில் ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கு 5 தடவைகள் முயற்சி செய்தேன். அவர் என்னைச் சந்திப்பதைத் தவிர்த்துக்கொண்டார். அப்படியான ரணில் ராஜபக்ஷக்களுக்குப் பயந்து கொண்டவர் என்பதால் அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது. எனவே, இவரால் எதுவுமே செய்ய முடியாது என முடிவு எடுத்துவிட்டோம். எனவே, தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து வாக்களிக்க வேண்டும்.” – என்றார்.









# கெஸ்பேவவில் ரணிலின் பிரசாரம்

கெஸ்பேவவில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் "ரணிலால் முடியும்" வெற்றிப் பேரணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.





# தூக்கில் தொங்கிய நிலையில் இளம் பெண்ணின் சடலம் மீட்பு

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா – ராகலை பிரதான வீதியோரத்தில் சமஹில் காட்டுப் பகுதில் தூக்கில் தொங்கிய நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை மாலை அயலவர்கள் வழங்கிய தகவலையடுத்து அந்தப் பகுதிக்குப் பொலிஸார் சென்று பார்வையிட்டபோது மரம் ஒன்றில் தூக்கிட்டவாறு பெண்ணொருவர் சடலமாகக் காணப்பட்டார்.

தேவாலதென்ன, கலஹகம, ஹக்கல பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளம் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# தற்காலிகமாக மூடப்பட்டது ஸ்ரீஜயவர்தனபுர பல்கலை

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தை தற்காலிகமாக மூடுவதற்கு நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து மாணவர்களும் நேற்று மாலை 06 மணிக்கு முன்னர் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற வேண்டுமென ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் பத்மலால் எம். மானகே அறிவித்திருந்தார்.

விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களும் நேற்று மாலை 06 மணிக்கு முன்னர் வெளியேற வேண்டுமென அவர் கூறியிருந்தார்.

இந்த அறிவுறுத்தலை மீறி பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கும் மாணவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பேராசிரியர் பத்மலால் எம் மானகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இரண்டு மாணவ குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வாக்களிக்கும் உரிமை கோரி பல்கலை மாணவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

ஜனாதிபதித் தேர்தலில் பல்கலைக்கழக மாணவர்கள் பலருக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் அற்றுப்போவதாகத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் 'பவ்ரல்' அமைப்பினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், ருஹுணு மற்றும் களனி பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிலருக்கே இவ்வாறு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் அற்றுப்போகும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாள் முழுவதும் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறுவதால் தூரப்பிரதேசங்களில் வசிக்கும் மாணவர்கள் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்குவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் ஆராய்ந்து தீர்வுகளை வழங்குவதற்கு பல்கலைக்கழக உபவேந்தர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக மனித உரிமைகள் ஆணையாளரான நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸ் பொறுப்பதிகாரியால் மிரட்டப்பட்டவர் சற்று நேரத்தில் கத்திக் குத்துக்கு இலக்கானார்

## நெல்லியடி பகுதியில் நேற்று முன்தினம் சம்பவம்

பொலிஸ் பொறுப்பதிகாரியின் அச்சுறுத்தலுக்குள்ளானவர் சில மணி நேரங்களில் கத்திக் குத்துக்கு இலக்கானார்.

யாழ்ப்பாணம் – நெல்லியடி பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் மந்திகை ஆதார வைத்தியசாலை ஊழியருமான கந்தப்பு கிரிதரன் என்பவரே காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு தற்போது விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வீட்டு உரிமை தொடர்பாக இரு தரப்பினரிடையே நீண்டகாலமாக ஏற்பட்ட தகராறு தொடர்பாக பொலிஸாரிடம் ஒரு தரப்பால் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், மற்றொரு தரப்பை நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி அச்சுறுத்தியமையுடன், அவரது வீட்டு உடைமைகளை தூக்கி எறிந்தார் எனவுன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸாரின் அச்சுறுத்தல் தொடர்பாக பாதிக்கப்பட்டவர் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்குச் சென்று முறையிட்டு விட்டு வீட்டுக்கு திரும்பிய போது இனந்தெரியாத நபர்களால் கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார்.

காயமடைந்தவர் அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக காயமடைந்தவரின் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'மாமனிதர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர். அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்.

அவரும் அவரது தந்தையார் 'அறப்போர்' அரியநாயகமும் ஆற்றிய தமிழினப் பணிக்கான கௌரவமாக பின்னர் விடுதலைப் புலிகளின் ஒழுங்கில் சந்திரநேருவின் மகன்களில் ஒருவரான சந்திரகாந்தனுக்கு எம்.பி. பதவி வழங்கப்பட்டது.

அண்மையில் பொதுக் கட்டமைப்பு சார்பில் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு பரிசீலிக்கப்பட்ட பெயர்களில் ஒன்று இந்த சந்திரநேரு சந்திரகாந்தன் ஆவார்.

தந்தையார் சந்திரநேருவை அரசியல் பொறுப்பாளர் கௌசல்யனுடன் சேர்ந்து தீர்த்துக் கட்டிப் பரலோகம் அனுப்பிய குற்றச்சாட்டு அப்போது ஒன்றாக இயங்கிய கருணா – பிள்ளையான் (சிவநேசதுரை சந்திரகாந்தன்) குழுவினர் மீது சுமத்தப்பட்டு வந்தது என்பது எல்லோருக்கும் அறிந்த விடயமே.

பொதுக் கட்டமைப்பு வேட்பாளராக பரிசீலிக்கப்பட்ட சந்திரநேரு சந்திரகாந்தன் நேற்று முன்தினம் கிழக்கில் நடைபெற்ற ரணில் விக்கிரமசிங்கவின் பிரசார கூட்டத்தில் ரணிலுக்கு பக்கத்தில் சிவனேசத்துறை சந்திரகாந்தனுடன் (பிள்ளயானுடன்) ஒன்றாக அமர்ந்து அளவளாவில் கொண்டிருந்த படம் வெளியாகியிருந்தது.

மாமனிதர் சந்திரநேருவின் ஆன்மா இந்த இரண்டு சந்திரகாந்தன்களின் அந்நியோன்னியத்தையும் பார்த்து எத்துணை துன்பப்பட்டு இருக்கும்? இது தான் 'அரசியல் சாக்கடை' என்பதா?

\+ \+ \+

வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் கட்சியின் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்று தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நேற்று ஊடக செய்தி ஒன்றை வெளியிட்டு உறுதிப்படுத்தி இருக்கின்றார்.

'ஏன் இந்த அறிக்கை? கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தவா?' – என்று சம்பந்தப்பட்ட தரப்பு ஒன்றிடம் கேட்டேன்.

'இல்லை ,இல்லை. 'சணம் பித்தம், சணம் வாதம்' போக்குக் கொண்ட தலைவரால் கட்சி உறுப்பினர்களும் தமிழ் மக்களும் குழம்புவதைத் தடுப்பதற்காகத்தான் இந்த அறிக்கை என்று அந்த தரப்புகள் விளக்கம் அளித்தன.

இந்தத் தலைவருடன் தமிழரசு கட்சி அரசியல் பயணம் நடத்துவது என்பது பாறாங்கல்லைக் காலில் கட்டிக் கொண்டு நீந்துவதற்கு ஒப்பானதுதான். எல்லாம் தமிழரசு கட்சியின் தலையெழுத்து....!

'அமிர்தலிங்கம் போட்டியிடுவதற்காக காங்கேசன்துறை தொகுதியைத் தான் விட்டுக் கொடுத்தார் என்று புளுகு மூடையை அவிழ்த்து விட்ட தலைவர் தானே இவர்....!?

---

## 15 இலட்சம் வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க 10 – 15 இலட்சம் வாக்குகளுக்கு மேல் பெற மாட்டார் என்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேமநாத் சி.தொலவத்த தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கியுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதியானது என்றும், இந்த நாட்டின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்காமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தில் பங்குகொள்ளுமாறு மக்களிடம் கேட்டுக்கொள்வதாகவும் அவர் கூறினார்.

கொழும்பு, பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே பிரேமநாத் சி.தொலவத்த எம்.பி. இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிடம் 28 இலட்சம் வாக்குகளே உள்ளன. அவரது மொத்த வாக்குகள் 55 இலட்சம் என்று யாராவது நினைத்தால், அவர்கள் தங்கள் கணித அறிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். சஜித் பிரேமதாஸ 28 இலட்சத்துக்கும் மேல் வாக்குகளைப் பெற முடியாது. எனவே, எங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறு–தியான வெற்றி என்றே கூற வேண்டும்." – என்றார்.

---

## தோல்வியை ஏற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் இருக்கின்றது எனவும், தன்னைத் தோற்கடிக்க நானும் அநுரகுமாரவும் தயாராகி வருகின்றோம் என்றும் புலம்புகின்றார். சஜித் ஏற்கனவே தோல்வியை ஏற்றுக் கொண்டுள்ளமையால்தான் இப்படி ஒப்பாரி வைக்கின்றார்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"இன்று அநுரகுமார நாடு முழுவதும் வெறுப்பை விதைத்து வருகின்றார். வெறுப்பு என்ற போர்வையின் ஊடாக அவர் அதிகாரத்தைப் பெற்றால் நாட்டுக்கு என்ன நடக்கும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்." – ஜனாதிபதி ரணில் கூறினார்.

"நிறைவேற்ற முடியாத பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் அநுரகுமார, தனது உண்மையான பொருளாதாரக் கொள்கையை நாட்டுக்கு எடுத்துரைக்க வேண்டும்." – என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

"பிரபலமாக இல்லாவிட்டாலும், மக்களின் எதிர்காலத்துக்காக எப்போதும் உண்மையை மட்டும் நான் கூறுகின்றேன்." – என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கெஸ்பேவவில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்ற "ரணிலால் முடியும்" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் மேலும் உரையாற்றுகையில்,

"அன்று அநுரகுமாரவிடம் ஒப்படைக்கப்பட்ட விவசாய அமைச்சரின் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றியிருந்தால் இந்த நாட்டின் விவசாயம் இன்று அபிவிருத்தியடைந்திருக்க. கொள்கையற்று வெறுப்பையே விதைக்கும் அவரது வேலைத்திட்டம் நாட்டின் அழிவுக்கு வழிவகுக்கும்.

எனவே, சஜித் பிரேமதாஸவுக்கும் நாமல் ராஜபக்ஷவுக்கும் வழங்கப்படும் வாக்கு அநுரகுமாரவுக்கு அளிக்கும் வாக்கு என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது.

எம்மைத் திருடர்கள் என்று சொல்பவர்கள். எதற்காக மக்களிடம் பொய் சொல்கிறார்கள்? நாம் திருடர்களைப் பிடிப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றோம். மோசடியால் திரட்டிய சொத்துக்களைக் கையகப்படுத்தக் கூடிய சட்டமூலத்தையும் தயாரித்திருக்கின்றோம்.

அவர்கள் மக்களிடம் பொய் சொல்கின்றார்கள். அவர்கள் கூறும் பொருளாதார முறை தவறானது. மக்கள் மத்தியில் குரோதத்தைத் தூண்டிவிட்டே அவர்கள் வாக்குகளைக் கோருகின்றார்கள்.

மக்கள் தம்முடைய, தமது பிள்ளைகளுடைய எதிர்காலம் பற்றிச் சிந்தித்து வாக்களிக்க வேண்டியது அவசியமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் எனக்கும், மொட்டுக் கட்சியினர் என்னோடு இருக்கின்ற அணியினருக்கும் வாக்களிப்பதே பொருத்தமாக அமையும்.

எனவே, தேர்தலில் எரிவாயு சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது ரூபாவும் கிடைக்காது." – என்றார்.

---

## சஜித்தை ஆதரிக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியாவில் கூடிய ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான குழு கட்சியின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும், சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் காலதாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகள் குறித்து அவருடன் பேசித் தீர்மானிப்பது தொடர்பாகவும் முடிவு எடுக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 16 ஆம் திகதி மீண்டும் கூடும் தேர்தல் தொடர்பான குழு, மேற்படி விடயங்கள் குறித்து முன்னேற்ற மீளாய்வைச் செய்து அது பற்றி மக்களுக்கு அறிவிக்கும் என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



# பன்முக நோக்கில் பாரதி நேற்று முன்தினம் நிகழ்வு

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு லிங்காஸ்வர கீதம் வழங்கிய ‘பன்முக நோக்கில் பாரதி’ எனும் விசேட நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.வடமராட்சி வல்லையில் உள்ள விக்னேஸ்வரா திருமண மண்டபத்தில் *( Yarl beach hotel & Restaurant )* இந்நிகழ்வு நடைபெற்றது.

லிங்காஸ்வர கீத இயக்குநர் ஷாஜிதா அட்ஜெயலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவும், சிறப்பு அதிதிகளாக வர்த்தகர் சண்முகசுந்தரம் பிறேம்குமாரும் பாடலாசிரியர் வெற்றி துஷ்யந்தனும் கலந்துகொண்டனர். மங்கலவிளக்கேற்றலுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் படைப்புகளை இசை, நடனம் ,இலக்கியம் என்னும் பல்கோண பார்வையில் வெளிப்படுத்தும் வகையிலான பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இறுதியாக கருத்தாடல் நிகழ்வு தேசிய கல்விற் கல்லூரியின் ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி ந. ரவீந்திரன் முன்னிலையில் இடம்பெற்றது.

அந்நிகழ்வில் கலாச்சார உத்தியோகத்தர்கள்,அதிபர்கள், ஆசிரியர்கள், தமிழ் பற்றாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






















# அரச நிறுவனங்களின் பணியாளர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வேன்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

அரச நிறுவனங்களில் தொழில் புரிகின்ற ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வது தனது கொள்கை திட்டத்தில் ஒன்று என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்களின் தேசிய மாநாட்டில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அனைத்து அரச நிறுவனங்களின் இருப்பு குறித்தும் கவனிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்வது குறித்தும் கவனிக்க வேண்டும்.

அத்தோடு இந்த நிறுவனங்களுடைய பாதுகாப்புத் தன்மையும் உறுதிப்படுத்தப்படும்.

அந்த நிறுவனங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு அது வலுப்படுத்தப்படுகின்ற போது, அந்த நிறுவனங்களில் சேவை செய்கின்ற ஊழியர்களின் உரிமையும் பாதுகாக்கப்படுகின்றது.

எனவே அரச நிறுவனங்களில் தொழில் புரிகின்ற ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வது எனது கொள்கை திட்டத்தில் ஒன்று.

இலாபமடைகின்ற நிறுவனங்களை மேலும் அதிக அளவில் இலாபமடையக்கூடிய நிறுவனங்களாக முகாமைத்துவப்படுத்துவதோடு, நட்டத்தில் இயங்குகின்ற நிறுவனங்களை இலாபமடையக்கூடிய நிறுவனங்களாக மாற்ற வேண்டும்.” – என்றார்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சிறுவர் துஷ்பிரயோகம்

அநுராதபுரம் மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வருவது குறித்து அநுராதபுரம் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 491 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும், மேலும் பல சம்பவங்கள் பதிவாகாமல் போயிருக்கலாம் எனவும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி மகேந்திர தஸநாயக்க தெரிவிக்கின்றார்.

இந்தப் பிரச்சினை அநுராதபுரம் மாவட்டத்திற்கு மாத்திரமானதல்ல. இலங்கை முழுவதற்குமான ஒரு பாரிய சிக்கல் விவகாரமாகும்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 2021 இல் 11,200 சம்பவங்களும், 2022 இல் 10,500 சம்பவங்களும், 2023 இல் முதல் பத்து மாதங்களில் 8,000 சம்பவங்களும் முறையிடப்பட்டிருக்கின்றன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் புள்ளி விவரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

இலங்கையில் சிறுவர்களைக் கடத்தல், யாசகம் பெறச் செய்தல், வல்வந்தமாகத் தொழிலுக்கமர்த்தல், கல்வியை இடைநிறுத்தல், கொடுமைப்படுத்தல், பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தல், பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்தல், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தல், சட்டபூர்வமான பாதுகாவலரிடமிருந்து சிறுவர்களைக் கடத்தல், பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தல், பாலியல் உறவுக்குத் தொடர்புகளைப் பெறுவதற்கு தூதாக சிறுவர்களைப் பயன்படுத்தல், சிறுவர்களை கவனிக்காமை, 16 வயதுக்கு குறைந்த சிறுமியை விபசாரத்துக்கு பயன்படுத்தல் எனப் பல்வேறு வகையான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகின்றன.

இலங்கையில் சிறுவர்களைப் பாதுகாக்க சட்டங்கள் உள்ளன. அவை கடுமையாகவும் உள்ளன. அதற்காக அமைச்சுகளும் திணைக்களங்களும் அதிகார சபைகளும் நிறுவப்பட்டுள்ளன. மாவட்டங்கள் தோறும் விசேட அதிகாரிகள் பட்டாளமே உள்ளது. பொலிஸ் துறை உள்ளது. அவ்வாறிருந்தும் சிறுவர்களை ஏன் எங்களால் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாக்க முடியவில்லை?

சமூக விழிப்புணர்வு இல்லை என்பதுதான் அதற்கு முக்கிய காரணமாகும்.

அனைத்து சிறுவர்களுக்கும் உயிர் வாழ்வதற்கும், பாதுகாப்பாக இருப்பதற்கும், சுதந்திரமாக இருப்பதற்கும், போதுமான கவனிப்பைப் பெறுவதற்கும், பாதுகாப்பான சூழலில் வளருவதற்கும், கல்வியைப் பெறுவதற்கும் உரிமை உண்டு. அதை சமூகம் தனது கடப்பாடாக - பொறுப்பாக - ஏற்கும் மனநிலையை ஏற்படுத்தப்பட வேண்டும்.

வறுமை, மது, போதைப்பொருள் பாவனை, குடும்ப வன்முறை, குடும்பப் பெரியோரின் பொறுப்பின்மை மற்றும் பாலியல் விரக்தி போன்ற சமூகக் காரணிகள் சிறுவர் துஷ்பிரயோகக் குற்றங்களுடன் நேரடியாகத் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன.

கடந்த பத்து ஆண்டுகள் நாட்டின் சகல மாவட்டங்களிலும் பதிவாகியுள்ள சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான புள்ளி விவரங்களை அவதானிக்கும் போது மேல் மாகாணம் உயர் மட்டத்திலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் கீழ் மட்டத்திலும் காணப்படுகின்றன.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை கலாசார விழுமியங்கள் இன்னும் உயர்வாகப் பேணப்படுவதால் இந்தத் துஷ்பிரயோகப் பாதிப்பு நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் சற்றுக் குறைவாக இருக்கலாம். ஆயினும் ஒட்டுமொத்த நாடு என்ற முறையில் இந்த சமூக முறைகேட்டை நமது சமுதாயத்திலிருந்து முழுமையாக ஒழிக்க நாம் கங்கணம் கட்டிச் செயலாற்ற வேண்டும்.





# இலங்கை கடற்படையைக் கண்டித்து செருதூர் மீனவர்கள் வேலைநிறுத்தம்

தங்களின் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் இலங்கை மீனவர்கள் மற்றும் இலங்கை கடற்படையினரைக் கண்டித்து செருதூர் மீனவர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மீன்பிடி தொழிலை நம்பியுள்ள சுமார் 2,500 பேர் வேலையிழந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் வங்கக் கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது இலங்கை கடற் படையினரால் கடுமையாக தாக்கப்படுவதும், சிறைபிடிக் கப்படுவதும் தொடர் நிகழ்வுகளாக நடந்து வருகின்றன.

சில நேரங்களில் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கி சூடு நடத்தும் சம்பவங்களும் அத னால் மீனவர்கள் உயிரிழக்கும் சம்பவங்களும் நடக்கின்றன. இதனைத் தடுத்து நிறுத்தக்கோரி மத்திய - மாநில அரசு களிடம் தமிழக மீனவர்கள் முறையிட்ட வண்ணம் உள்ள னர்.

இந்த நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்னர் நாகை மாவட்டம் செருதூர் பகுதியைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் அடுத்தடுத்து இலங்கை கடற்கொள்ளை யர்களால் தாக்கப்பட்டனர். இந்தச் சம்பவங்களில் தமிழக மீனவர்கள் தங்களது மீன்பிடி உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்களை பறிகொடுத்தனர்.

அந்த அதிர்ச்சி விலகுவதற்குள்ளாக கடந்த 10 ஆம் திகதி கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த செருதூர் மீனவர்களின் ஃபைபர் படகு மீது இலங்கை கடற்படை கப்பல் மோதி ஏற்பட்ட விபத்தில் நான்கு மீனவர்கள் கடலில் விழுந்து தத்தளித்த னர். நல்லவேளையாக அவர்கள் அனைவரும் உயிருடன் மீட்கப்பட்டனர்.

சக மீனவர்களின் உதவியோடு கரை திரும்பிய அந்த நான்கு மீனவர்களும் ஒரத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், தமிழக மீனவர்கள் கடலில் சுதந்திரமாக மீன்பிடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், தமி ழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்களை கண்டிக்கும் விதமாகவும் செருதூர் பகுதி மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்தனர்.

அதன்படி, கடலுக்கு ஏற்கனவே மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கரை திரும்பிய நிலையில், நேற்று புதிதாக யாரும் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லவில்லை. இதனால் செருதூர் பகுதியில் உள்ள சுமார் 400 இற்கும் மேற்பட்ட ஃ பைபர் படகுகள் பாதுகாப்பாக கரையோரம் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. இதனால், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள 2,500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் மற்றும் மீன்பிடி சார்ந்த தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

மத்திய - மாநில அரசுகள் தலையிட்டு இலங்கை அரசுடன் சுமுகமாக பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என செருதூர் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பழமையான கோட்டைச் சுவர் இடிந்து விபத்து; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் உயிரிழப்பு

இந்தியா - மத்தியப்பிரதேச மாநிலம், டாடியா நகரில் பெய்து வரும் கன மழையால் 400 ஆண்டுகள் பழமையான ராஜ்கர் கோட்டைச் சுவர் இடிந்து அருகிலிருந்த வீட்டின் மீது விழுந்தது.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் உயிரி ழந்தனர்.

இடிபாடுகளில் சிக்கியிருந்த 2 பேர் காயங்களுடன் மீட்கப் பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை 4 மணி அளவில் ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இந்திய மதிப்பில் 4 லட்சம் ரூபா நிவாரண நிதி வழங்குவதாக அம்மாநில முதல்வர் மோகன் யாதவ் அறிவித்துள்ளார் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.














# பதவியை இராஜினாமாச் செய்ய தயார் என்கிறார் மம்தா பானர்ஜி

"மக்களின் நலனுக்காக நான் என்னுடைய பதவியை இராஜினாமா செய்ய தயாராகவே இருக்கிறேன். ஆனால் என்னுடைய எதிரிகள் என்னுடைய நாற்காலியைத்தான் குறிவைத்திருக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்."

– இவ்வாறு மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மம்தா பானர்ஜி செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"எனக்கு முதல்வர் பதவி வேண்டாம். எங்கள் அரசாங்கம் நிறைய அவமானங்களை பார்த்து விட்டது. நடந்து வரும் போராட்டங்களில் அரசியல் சாயம் கலந்திருக்கிறது. நீதிவேண்டி மக்கள் வீதிகளில் இறங்கி போராடுகிறார்கள். மக்களின் நலனுக்காக நான் என்னுடைய பதவியை இராஜினாமா செய்ய தயாராகவே இருக்கிறேன். ஆனால் என்னுடைய எதிரிகள் என்னுடைய நாற்காலியைத்தான் குறிவைத்திருக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

மருத்துவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் 2 மணி நேரங்களுக்கு மேலாக காத்திருக்கிறோம். நாங்கள் திறந்த மனதுடன் அவர்களுடன் கலந்துரையாட விரும்புகிறோம். இந்த போராட்டங்கள் தொடங்கியதிலிருந்து இதுவரை 27 நோயாளிகள் இறந்துள்ளனர். பெரும்பாலான மருத்துவர்கள் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் ஒருசிலர் மட்டுமே அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக எங்கள் கவனத்துக்கு வந்துள்ளது."– என்றார்.











# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கருத்துக்கணிப்பில் கமலா வெற்றி



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கமலா ஹாரிஸ் முதன் முறையாக நேற்று நேரடி முன்தினம் விவாதத்தில் பங்கேற்றனர்.

விவாதத்தின்போது இருவரும் தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர்.

இந்நிலையில், நேரடி விவாதத்தில் வெற்றி பெற்றது யார் என்பது குறித்து அமெரிக்க ஊடகங்கள் கருத்துக்கணிப்பு நடத்தின.

இது தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் கமலா ஹாரிசுக்கு 63 சதவீத பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ட்ரம்புக்கு 37 வீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர் என பல்வேறு வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கமலா ஹாரிஸ் விவாதம் முழுவதும் நிதானமாகவும், தகுதியுடனும் இருந்தார் எனவும் ட்ரம்ப் விரக்தியடைந்து காணப்பட்டார் என்பது தெளிவாக தெரிந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் விவாத நிகழ்ச்சியில் கமலா ஹாரிஸ் வெற்றி பெற்றுள்ளார் எனறு குறிப்பிடப்பட்டுள்ளது.



# கோதுமைத் தவிட்டை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய இலங்கை எடுத்த தீர்மானம் குறித்து சந்தேகங்கள்

## இங்கு கால்நடைத் தீவனத்துக்கு மேலும் பற்றாக்குறை வரும்

**● ந.லோகதயாளன்**

கோதுமைத் தவிட்டை ஏற்றுமதி செய்து கால் நடைகளின் வயிற்றிலும் அடிக்க ரணில் அரசு துணிந்துவிட்டமை 2024-09-09 அமைச்சரவையின் தீர்மானத்தில் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை வாழ் மக்களின் வயிற்றில் அடித்த அரச தற்போது கால்நடைகளையும் விட்டுவைப்பதாக இல்லை. அவற்றின் வயிற்றிலும் அடிக்க எண்ணி விட்டாரகள். நாட்டின் தேவைக்காக இறக்குமதி செய்யும் கோதுமை பிரித்தெடுக்கும்போது கோதுமைத் தானியத்தில் சுமார் இருபது வீதம் கோது மற்றும் தவிடாக அகற்றப்படுகின்றன. அவை தற்போது கால்நடைகளின் உணவுக்காக பயன்படுத்தப்படு கின்றன. இவை கோதுமைத் தவிடு மற்றும் கோது களாக நாட்டுக்குள் சந்தைப்படுத்தப்படுகின்ற காலத் திலேயே கால்நடைகளிற்கான உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை. இந்த நிலையில் கோதுமையில் இருந்து அகற்றப்படும் கோதுமைத் தவிட்டை சீன நாட்டிற்கு ஏற்றுவதற்கு நாட்டின் விவசாய பெருந்தோட்ட அமைச்சு 2024-09-09 ஆம் திகதிய அமைச்சரவைக்கு ஓர் பத்திரத்தை சமர்ப்பித்து அனுமதி பெற்றுள்ளது.

அந்நிய செலாவணியை ஈட்டல் என்ற பெயரில் உள்நாட்டில் கால்நடைத் தொழிலுக்கு ஆப்பு வைக் கும் இந்தக் கைங்கரியம் அரங்கேற்றப்படுகின்றது.

இதன்மூலம் கோதுமைத் தவிடு சீனாவிற்கு ஏற்றுமதி செய்ய அரசு இரகசிய முயற்சியில் ஈடுபட்டுள்ளமை நிரூபணமாகிவிட்டது. இலங்கையில் தற்போது காணப்படும் 25 லட்சம் கால்நடைகளிற்கு ஆண்டுதோறும் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் பண்ணையாளர்கள் தவித்து வருகின்றனர். இதில் வடக்கு கிழக்கு பெரும் காடு உள்ள மாவட்டங்களில்கூட மேய்ச்சல்தரை மற்றும் மழை காலத்தில் பராமரிப்பு இடம் போன்றவையின்றி இன்றி ஆண்டுதோறும் பல நூறு கால் நடைகள் உயிரழக்கின்றன. ஆயிரக் கணக்காண மாடுகளை வளர்ப்பவர்கள் கால் நடைத் தீவனத்தை வாங்கும் வசதியின்றி அல்லாடும் நிலையில் ஆடு,மாடுகள் தீவனம் இன்ற இறக்கும் சூழல் காணப்படுகின் றது.

இவ்வாறான கால் நடை உணவு வகைகளின் விலை அதிகரிப்பின் காரணமாகவே பல ஆயிரம் கால் நடை வளர்ப்புகள் கை விடப்பட்டதன் எதிரொலியாகவே இன்று பால் மா மற்றும் முட்டை, இறைச்சி என்பன இறக்குமதி செய்யும் நிலையில் நாடு உள்ளது.

இவை எவற்றையும் கருத்தில் எடுக்காத அரசு கோதுமைத் தவிட்டை சீன நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதி அளிப்பதன் பின்னணியில் மறைந் துள்ள இரகசியம் உடனடியாக கண்டுகொள்ள முடியாதுள்ளது.

இலங்கை தனக்குத் தேவையான கோதுமையை அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும்போது சீனா ஏன் இதனை நாடுகின்றது என்பது பொருளாதார ரீதியி லும் சந்தேகங்கள் எழக்கூடும்.

### மாடு வளர்ப்பவர்

இவை தொடர்பில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 12 பால்மாடுகளை முழுநேர வாழ்வாதார தொழிலாக கொண்ட அளவெட்டியைச் சேர்ந்த 69 வயதான நாகராசா தேவன் கருத்து தெரிவிக்கையில் -

35 வருடமாக இந்தத் தொழிலையே நம்பி வாழ் கின்றேன். பெரும் நெருக்கடியின் மத்தியில் விலை ஏற்ற இறக்கங்களுடன் தற்போது கால் நடைத் தீவனம் கிடைக்கின்றது. அதனையும் அரசு இலாபம் பார்க்கும் நோக்கில் ஏற்றுமதிக்குத் திட்டமிட்டுவிட்டது. 2022 ஆம் ஆண்டு விவசாயிகள் வீதியில் இறங்கிய பின்பு நாடே வீதிக்கு வந்தது. அவ்வாறான ஓர் நிலையை கால் நடை வளர்ப்பாளர்கள் மூலம் அரசு திரும்பவும் ஏறபடுத்த முயற்சிக்வின்றது. ஏனெனில் போர் காலத்தில்கூட உடைமைகள் அனைத்தையும். இழந்தபோதும் எமது கால் நடைகளையே எடுத்துச் சென்றே பிழைத்தோன். எம்மை அரசு புதுவடிவில் வஞ்சிக்க எண்ணுகின்றதோ என்ற சந்தேகம் எழுகின்றது. - என்றார்.

### பேராசிரியர் சி.விஜயகுமார்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பொரு ளாதாரத்துறை பேராசிரியர் சி.விஜயகுமாரை இவை தொடர்பில் தொடர்பு கொண்டு கேட்டபோது -

சீனா தனக்குத் தேவையான கோதுமையை தானே உற்பத்தி செய்யும் வல்லமை கொண்டுள்ள ஒரு நாடு. ஏன் இலங்கையை நாடுகின்றது என்பது புரியாவிட்டாலும் கோதுமைத் தவிட்டினை

ஏற்றுமதி செய்வதன் மூலம் நிச்சயமாக எமது நாட்டில் பற்றாக்குறை ஏற்படும். விலை அதிகரிப் பினை ஏற்படுத்தும். அதனால் கால்நடை உணவுத் தட்டுப்பாடு ஏற்படும்.

ஏற்றுமதியின் அளவுகள் அதிகரிக்கும்போது உற்பத்தியின் தரமும் குறைவடையும். இதனால் எமது நாட்டின் கால் நடைகளிற்கும் நிறைவான உணவு கிடைக்காத தன்மையே ஏற்படும். - என்றார்.

### விரிவுரையாளர் கணேசமூர்த்தி

இது தொடர்பில் கொழும்பு பல்கலைக் கழக பொரு ளியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி

தொடர்ச்சி▼




# கோதுமைத் தவிட்டை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய இலங்கை எடுத்த தீர்மானம் குறித்து சந்தேகங்கள்

**தொடர்ச்சி▲**

கணேசமூர்த்தி கருத்து தெரிவிக்கையில் -

சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்றால் அது சீனாவில் உள்ள ஓர் நிறுவனம் தனது இலாபம் கருதி இந்த கோரிக்கையினை முன் வைத்திருக்கும். அது எந்த வகையிலான இலாபம் என்பது உடனடியாக கண்டுகொள்ள முடியாது.

இங்கே ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தை விடவும் வேறு நோக்கம் அரசியல் ரீதியிலான பொரு ளாதார நன்மை கருதிய வர்த்தகமாக இருக்கலாம்.

கோதுமை இறக்குமதி என்பதற்காக கோதுமை தவிடு ஏற்றுமதி செய்யக்கூடாது எனக் கூற முடியாது. ஏனெனில் பெற்றோலும் இறக்குமதியானாலும் ஏற்றுமதியும் உண்டு.

அதேநேரம் கோதுமையில் இருந்து அகற்றப்படும் தவிடு உள் நாட்டு கால் நடைகளிற்கான பிரதான உணவுத் தேவைக்கான மூலப் பொருளாக உள்ளது. அந்த மூலப் பொருளை இறக்குமதி செய்யும் ஒரு நாட்டில் இருக்கும் மூலப் பொருளையும் ஏற்றுமதி செய்ய முயற்சிப்பது அந்தச் சமூகத்தை - அதாவது கால் நடை வளர்ப்பாளர்களை -.எண்ணிப்பார்க்காத செயல்.

தற்போது கிடைக்கும் கோதுமைத் தவிடு உள் நாட்டுத் தேவைக்கு அதிகமானதா, போதாமை உள் ளதா அல்லது ஆண்டு ஒன்றிற்கு எவ்வளவு தேவை போன்ற புள்ளி விவரங்களை முதலில் அரசு வெளியிட வேண்டும். பின்னர் பண்ணையாளர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும். அதன் பின்னரே ஏற்று மதி தொடர்பில் ஆராய வேண்டும். மாறாக 'எடுத் தோம், கவிழ்த்தோம்' என முடிவெடுத்தால் இந்த நாட்டில் ஏற்கனவே ஓர் அனுபவம் உண்டு. அதுதான் விவசாயிகளின் கருத்தைக் கேட்காது பசளை களைத் தடை செய்தமை. அதன் விளைவை உலகு அறியும். இதுவுத் அந்த செயலிற்கு ஒப்பானது. - என்றார்.

**சுமந்திரன் எம்.பி.**

இது தொடர்பில் அரசியல் ரீதியிலான கருத்தை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில் -

நாட்டில் உள்ள கால்நடைகளிற்கான வளத்தையும் ஏற்றுமதி செய்யும் நிலை கண்டிப்பாக தடுக்கப்பட வேண்டும். ஏனெனில் நாடு பூராகவும் 40 லட்சம் கால் நடைகள் இருந்தாலும் வடக்கில் மட்டும் 4 லட்சத்து ஆயிரத்து 674 மாடுகளும் , 2 லட்சத்து 12 ஆயிரத்து 348 ஆடுகளும், 24 ஆயிரத்து 383 எருமைக ளும் என 6 லட்சத்து 38 ஆயிரத்து 405 கால் நடைகள் உள்ளன என வடக்கு மாகாண கால்நடைத் திணைக் களத்தின் புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.


இவற்றில் எனது தேர்தல் மாவட்டமான யாழ்ப்பா ணம் மாவட்டத்தில் கால்நடைகள் தீவனத்தில் மட்டுமே தங்கியுள்ளது. ஏனைய மாவட்டத்திலும் கணிசமான கால்நடைகள் இந்த உற்பத்தி தீவனைத்தை நம்பியும் வாழும் சூழலில் கோதுமை தவிடு ஏற்றுமதி என்பது கால்நடைகளையும் பண்ணையாளர்களையும் மிகவும் நெருக்கடிக்குள் தள்ளும் ஓர் விடயம் என்றார்.

**ஐங்கரநேசன்**

வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இது தொடர்பில் தனது கருத்தை தெரிவிக்கையில் -

இலங்கையின் கால்நடைகளின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய பலவிதமான கால் நடை உணவுகள் இன்றுவரை இறக்குமதி செய்யப்படுகின் றன. அதில் உடனடி உணவாகப் புல் வகைகள் கூட இறக்குமதி செய்யும் நிலையில் மிகவும் புரதச் சத்து நிறைந்த இந்த கோதுமைத் தவிட்டை ஏற்றுமதி செய்வதன் மூலம் கால் நடைகளின் பால் கறவைகளின் அளவு அதிகளவில் குறைவடையும் அப்போதும் நாம் பால் மா இறக்குமதியை நம்பியே வாழ வேண்டிய அவலத்திற்குத் தள்ளப்படுவோம்.

இதன்போது ஏற்றுமதி மூலமும் இறக்குமதியின் மூலமும் ஆட்சியாளர்கள் மட்டும் நன்மை அடைவர். என்றார்.





# சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நேற்று வவுனியாவில் ஜலனி பிரேமதாஸ பிரசாரம்

(கே.வசந்தன்)

சஜித் பிரேமதாஸவை ஆதரித்து அவரது மனைவி ஜலனி பிரேமதாஸ நேற்று வவுனியாவில் பரப்புரையில் ஈடுபட்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீனின் அழைப்பின் பேரில் வவுனியா சாளம்பைக்குளம் கிராமத்துக்கு வருகை தந்து அவர் அங்கு மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில் ரிசாட் பதியுர்தீன், மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா கமகே, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.ஜெயதிலக ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.







# போலி கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தினராம் 7 சிரியப் பிரஜைகள் கட்டுநாயக்கவில் கைது

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் 2 குடும்பங்களைச் சேர்ந்த சிரியப் பிரஜைகள் 7 பேர் கட்டு நாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி, இத்தாலி யின் ரோம் நகருக்கு செல்ல முயன்ற குற்றச்சாட்டிலேயே இந்த 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 4 சிறு வர்களும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. துருக்கியில் உள்ள தரகர் ஒருவர் ஊடாக 2000 டொலர் பணத்தினைச் செலுத்தி அவர்கள் அனை வரும் கடவுச்சீட்டை பெற்றுக் கொண்டுள் ளமை விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

# திசைக்காட்டிக்கு வாக்களிப்பதற்கு மறுப்புத் தெரிவித்தவர் மீது தாக்குதல்

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு அறிவுறுத்தி நபர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று காலி – இந்துருவ – கைக்காவலை பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான நபர் தற்போதுபலபிட்டியவைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர் தலைக்கவசம் அணிந்திருந்தார் எனவும் அவரது தலைக்கவசத்தினாலேயே இந்தத் தாக்குதலை நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் சின்னமான திசைக்காட்டிக்கு வாக்களிக்குமாறு, தாக்குதல் நடத்திய நபர் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்.

எனினும் அந்தச் சந்தர்ப்பத்தில் தாக்குதலுக்கு உள்ளான நபர் தாம் தமது வாக்கினை தமக்கு விருப்பமானவருக்கே வழங்குவார் எனத் தெரிவித்துள்ளார்.

இதில் ஆத்திரமடைந்த தலைக்கவசம் அணிந்திருந்த நபர், தமது தலைக்கவசத்தைக் கழற்றி தாக்குதல் நடத்தியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதலில், தாக்குதலுக்கு உள்ளான நபரது வலது கண் பாதிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# நாமல் ஆட்சியில் மஹிந்த பிரதமர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெற்றால், பிரதமர் பதவியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கவுள்ளார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் தாம் வெற்றி பெற்றால் எதிர்வரும் 22 ஆம் திகதியே நாடாளுமன்றம் கலைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது தரப்பினரின் ஒத்துழைப்புடன் இடைக்கால அமைச்சரவை ஒன்று உருவாக்கப்படும் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# முகாமைத்துவ, வணிக கற்கைகள் பீடத்தின் ஏற்பாட்டில் ‘நாளைய முதலீடு’ இளங்கலை ஆய்வு மாநாடு ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் இளங்கலை ஆய்வு மாநாடு - *undergraduate research symposium* இன்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

‘நாளைய முதலீடு – வளர்ந்துவரும் நிதித்துறைப் போக்குகளை ஆராய்தல்’ என்ற தொனிப்பொருளுடன் சீ.எவ்.ஏ. ஸ்ரீலங்காவின் அனுசரணையுடன் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் நிதி முகாமைத்துவத் துறை இந்த ஆய்வு மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடக் கேட்போர் கூடத்தில் நிதித்துறைப் பேராசிரியர் திருமதி ரதிராணி யோகேந்திரராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன், சீ.எவ்.ஏ. ஸ்ரீலங்கா குழுமத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான நுவான் ஜெயவர்த்தன ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிதியியல் பேராசிரியர் திருமதி சாந்த ரூபி புவனேந்திரா மற்றும் சீ.எவ்.ஏ. ஸ்ரீலங்கா குழுமத் தலைவர் அருண பெரேரா ஆகியோர் முதன்மை உரைகளை வழங்கவுள்ளமையுடன், மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் மற்றும் சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டல் அமர்வும் இடம்பெறவுள்ளது. இந்த ஆய்வு மாநாட்டில் உள்ளூர், வெளியூரைச் சேர்ந்த 44 இளங்கலை மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று நிதி முகாமைத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி எல். கெங்காதரன் தெரிவித்தார்.



# தேசிய மக்கள் சக்திக்கு எதிராக பலரும் சூழ்ச்சி என்கிறார் அநுர

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் போது தேசிய மக்கள் சக்திக்கு எதிரான தரப்பினர் குழப்பங்களை விளைவிக்கும் சூழ்ச்சியில் ஈடுபடத் தயாராகவுள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

திகனயில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“தற்போதுள்ள அரசியல் நெருக்கடியிலிருந்து இருந்து விடுவித்துக் கொள்வதற்கான கொள்கை ஒன்று அவசியம்.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனைத்தும் கேளிக்கையாகி விட்டது.

எனவே, மக்கள் சிந்தித்து இந்த தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.” – என்றார்.









# இணையத்தின் ஊடாக மோசடி கொழும்பில் 13 சீனர்கள் கைது

இணையத்தின் ஊடாக பல மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்த சந்தேகத்தின் பேரில் 13 சீன பிரஜைகளை இன்று நேற்றுக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களில் இரண்டு சீன பெண்களும் அடங்குகின்றனர். அவர்கள் அனைவரும் இன்று கொழும்பு பிரதான நீதுவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

பொரளை, கோதமி வீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சீன சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். மோசடிக்கு பயன்படுத்தப்பட்டவை என்று கூறப்படும் பல மடிக்கணினிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு சீனப் பெண்களும் 24 மற்றும் 29 வயதுடையவர்கள் எனவும், ஏனைய சீன சந்தேக நபர்கள் 30 முதல் 44 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# வாக்காளர் அட்டை இன்றியும் வாக்கை பதிவு செய்ய முடியும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இன்றியும் வாக்கினைப் பதிவு செய்ய முடியும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புகின்றவர்கள் மாத்திரம் அன்றி, உள்நாட்டிலேயே வசிக்கின்றவர்களும் வாக்காளர் அட்டை இன்றி வாக்களிக்க முடியும்.

வாக்காளர் அட்டை என்பது வாக்காளர்கள் தாங்கள் வாக்களிக்க வேண்டிய தொகுதியை அடையாளம் காண்பதற்கும் வாக்குச்சாவடியில் தமது தொடரிலக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குமே வழங்கப்படுகிறது.

வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தங்களது அடையாள அட்டையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்டரீதியான அடையாள ஆவணங்களைக் காண்பித்து வாக்கினைப் பதிவு செய்ய முடியும்.

அதேநேரம் தேர்தல்கள் ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ இணையத் தளத்துக்குப் பிரவேசித்து, தமது அடையாள அட்டை இலக்கத்தை வழங்கி தமது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையின் பிரதியையும் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழிகளில் வாக்காளர்கள், வாக்காளர் அட்டையின்றியே வாக்களிப்பதற்கான வசதிகள் இருப்பதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

# முட்டை வியாபாரிக்கு 06 மாத கடூழிய சிறை



அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குருநாகல், மாதவ பிரதேசத்தைச் சேர்ந்த முட்டை வியாபாரி ஒருவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 06 மாத கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிலெஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தினால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 13.09.2024




இன்றைய நாள் நீங்கள் விரும்பத்தக் கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத்தொகையாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித் தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகமான மன ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன் படுத்த வேண்டும். ஸ்ரீ லட்சுமி நரசிம் மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக்காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணிகளை குறித்த நேரத்திற்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.உறவு என்று வரும் போது நீங்கள் அதனை லேசாக கையாள வேண்டும். அன்பும் புரிந்து கொள்ளுதலும் உறவை சிறப்பாக்கும்.




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. என்றாலும் வருத்தப்படு வதை குறைத்துக் கொண்டு, உங்க ளுக்கு விருப்பமான விஷயங்களுக் காக நேரத்தையும் திறமையையும் பயன்படுத்துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள் நாளை திட்டமிட்டு பணியாற்றுங்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்றுவீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப்படாது.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடிவெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப் படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலை யில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனிமையான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத் துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற் றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக் கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள்வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகையில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதிற்கு ஆறுதல் தரும்.முக்கிய முடி வுகள் எடுப்பதை தவிர்க்கவும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய்வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உறவுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.




நீங்கள் அதிகப்படியாக செயலாற்றி னால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப்புள்ள பொருட்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் பாதகமான விளை வுகளை தவிர்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப் படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செயலாற்றினால் நீங்கள் நன்மை காணலாம். பனியின் தரத்தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இருவருக்குமான உறவை வளர்க்க உதவும். சேமிப்பது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கும்.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்றைய நாளை முறை யாக திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள்எந்தப் பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி கானபீர்கள். உங்கள் பணியைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்களின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.09.2024




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள். ஆனால் சிறப்பாக திட்டமிட்டால் பணம் குறைவாக செலவு




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்காது. என்றாலும் அமைதியாக செயல்களை கையாண்டால் சரியாக செயலாற்றலாம். செயல்களை பொறுமையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக ஆக்கலாம்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை விட அதிகம் பணம் இன்று உங்களுக்கு தேவையாக இருக்கும். என்றாலும்சூழ்நிலையைப் புரிந்து கொண்டால் எது




நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படு வீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத் திற்கு செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெரும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒருவரோடொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத்தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள்.

